بسم الله الرحمن الرحيم

**Friday Sermon / வெள்ளிக்கிழமை குத்துஃபா 14/10/2016**

**(12 Muharram 1437 HIJRI)**

## "PROTECT THE LIFE & HONOUR OF OTHERS"

# "பிறரின் வாழ்வும் அந்தஸ்தும் பாதுகாப்போம்"



**Hazrat Khalifathullah Munir Ahmad Azim (A)**

உலக மக்களுக்கு சலாம் தெரிவித்தப் பிறகு தஷஹ்ஹீதும் தஅவதும், அல்ஃபாத்திஹாவும் ஓதிக் கொண்டு ஹஸ்ரத் முனீர் அஹமது அஸீம் (அலை) அவர்கள் கீழ் வருமாறு தன் பேருரையை ஆரம்பித்தார்.

பகுத்தறிவின்றி சட்டங்களை குடிமக்களின் மேல் திணிப்பதற்கு இஸ்லாம் துரிதம் காட்டுவதில்லை. மாறாக நபர்களின் இரகசியங்களை, மதிப்போடு காண்பதும் அவற்றை பாதுகாப்பதற்கான நல்லொழுக்க அறிவுரை வழங்கவும் செய்கின்றது. காவலாளிகளையோ,

புகைப்பட கேமராக்களையோ, மற்று எதாவது இயந்திரத்தின் உதவியுடன் ஒற்றர் வேலைப் பார்த்து அதன் வாயிலாக பிறரின் இரகசியங்களில் அத்துமீறல் நடத்தவும் செய்வதில்லை.

அபூதாவூதும், அல்ஹாக்கிமும் ரிப்போர்ட் செய்த, செய்துஇப்னு வஹபில் வந்துள்ள ஒரு தூதர் வசனத்தில் கூறப்படுகின்றது. ஒரு நாள் ஒருவர் அப்துல்லாஹ் இப்னு- மஸத் (ரலி) விடம் கூறினார். அல்- கலீத்-இப்னு உக்குப என்ற நபர் மது அருந்தியதாக தெரிகின்றது. காரணம் அன்னாரின் தாடியில் நின்று மதுவின் வாசம் வெளிப்படுகின்றது. இப்னு – மஸீத் (ரலி) பாதிலாக கூறினார். ஒற்றர் வேலை பார்ப்பது நாம் முஸ்லீங்களுக்கு தடை செய்யப்பட்டிருக்கின்று. அவர்களின் குற்றம் கண்டுப்படிப்பதிலிருந்தும் நாம் விலகபட்டிருக்கின்றோம். ( நீங்கள் கூறும் படி அல்கலீத் நம் அருகில் வந்தால்) அப்போது நாம் அதற்கான தண்டனையை கொடுப்போம். நபி (ஸல்) கூறியதாக ரிப்போர்ட் செய்யப்பட்டிருக்கின்றது. ஆட்சி புரிபவர் சந்தேகத்தின் பெயரில் மக்களின் மேல் விசாரணை நடத்துதல் அவன் அவர்களை வழி தவற வைக்கின்றான். (அபூதாவூத், அல்ஹாக்கிம்)

ஒரு நம்பிக்கையாளர் தனது குற்றங்களையும் பிறரின் குற்றங்களையும் மறைத்து வைப்பதற்கு தூதரின் போதனைகளில் தெளிவாக கூறப்பட்டுள்ளது என்பதை நாம் கவனிக்க வேண்டும். அப்துல்லாஹ் இப்னு உமர் (ரலி) ரிப்போர்ட் செய்திருக்கின்றார். மாயிஸ் இப்னு மாலிக் அல் அஸ்லமியின் சட்ட மீறுதலை அங்கீகரித்தப்பின் இறைத்தூதர் (ஸல்) கூறினார். இறைவனால் தடைச் செய்யப்பட்ட ( விபசாரம், முறைத் தவறிய பாலியல் செயல்) இந்த நெறித் தவறிய உடல் ஊனத்தில் நின்று பின் திரும்பவும், இன்னும் உங்களில் எவராவது இச்செயலில் அகப்பட்டு விட்டால் இறைவனின் இரகசியத்தால் அது மறைக்கப்பட்டிருக்கின்றது. (அதாவது அவன் அச்செயல் ரகசியமாக பாதுகாக்கட்டும் பிறரிடம் அதை வெளிப்படுத்தமாலிருக்கட்டும் ) அவன் நிச்சயமாக இறைவனிடம் மன்னிப்புக் கோர வேண்டும். நிச்சயமாகவும் எவராவது தனது பிழயை நம்மை அறிவித்தால், தவறு செய்தேன் என ஒப்புக் கொண்டால் இறை வேதத்தின் விதிப்படி தண்டிக்கப்படும்.

மிக பிரபலமான இரண்டு இமாம்களான புகாரியினுடையவும் முஸ்லீமீனுடையவும் விதிப்படி இவ்விஷயத்தில் நமக்கு விதி அறிவிக்கலாம்.

மாயிஸ் தனது விபச்சார குற்றத்தை ஒப்புக் கொண்டு நபிகள் நாயகம் (ஸல்) அருகில் நான்கு தடைவ வந்தார். அதற்கு பின்னரே அன்னாரின் குற்றத்தை தூய தூதர் (ஸல்) அங்கீகரித்தார். அன்னாரின் குற்ற சம்மதத்தை தவிர வேறெந்த தெளிவும் இல்லாததினால் அன்னாரை குற்றமற்றவராக்க தூதர் (ஸல்) பலத்தவணை முயற்சித்தார். ஆனால் மாயிஸ் தனுது தவறில் நிலைத்து நின்றார். இதுவே தான் கௌமிதி பெண்ணிற்கும் ஏற்பட்டது. (அல் காமிதிய்யா)

மாயிஸின் தவறு தன்னிடம் கூற ஊக்கு வித்த ஹஸலிடம் தூதர் (ஸல்) கூறினார். இது உங்களிடம் நீங்கள் மறைத்து வைத்திருந்தால் உங்களுக்கு அது நன்றாக இருந்திருக்கும். அவூஹீரைரை (ர) ரிப்போர்ட் செய்கிறார். தூதர் (ஸல்) கூறினார். ஒருவரின் தவறை இவ்வுலகின் மறைத்துவைத்தால் விதி நாளில் அன்னாரின் தவறை அல்லாஹ் மறைத்து வைப்பான். தூதர் (ஸல்) கூறினார். எவருடைய தவறை மற்றொருவர் பார்த்தால் அவர் அதை மனதில் வைத்தால் (அதாவது அதை அவன் விளம்பரப்படுத்தாமலிருந்தால்) குழித்து மூடப்பட்ட பஞ்சு குழந்தையை மரணத்தில் நின்று உயிர்ப்பித்தவனை போலாவார் (அபூதாவூத், அல்ஹாக்கிம்)

தவறுகள் பொறுத்து கொடுப்பதற்கும் மன்னிப்பு வழங்குவதற்குமே இஸ்லாம் முஸ்லீம்களை ஊக்கப்படுத்துகின்றது. மனிதர்கள் ஒருவருக் ஒருவர் தவறுகளில் விழலாம். உதாரணமாக திருட்டுப் போன்ற விஷயங்கள்! ஒரு தடைவ அவ்வகை வழக்கு ஒன்று நீதி மன்றத்தில் வந்தது. மன்னிப்பு வழங்குவதற்கும் பரிவுக் காட்டுவதற்கும் வாதிப்பதில் ஒரு தவறுமில்லை. (அதாவது சரியான விதி நிலை நாட்ட வேண்டும்.) இந்த கோணத்தில் தான் அப்துல்லாஹ் இப்னு உமர் (ரலி) வின் இந்த தூதர் வசனத்தை புரிந்துக் கொள்ள வேண்டும். அபராதமோ, தண்டனையோ நடைமுறைப்படுத்தும் விஷயத்தில் ஒன்றுக் கொண்று

பொறுத்துக் கொள்ளுங்கள், மன்னிப்பு கொடுங்கள். என்னுடைய பார்வையில் என்ன கொண்டு வரப்படுமோ அது நிலை நாட்டப்படும் (அபூதாவூத் அனசாயி, அல்ஹாக்கீம்)

ஒரு முறை ஒருவர் தூதர் (ஸல்) அருகில் வந்து தண்டனைக் குரிய ஒரு தவறு செய்தேன் என்று கூறினார். தூதர் (ஸல்) அன்னார் செய்த தவறு என்ன வென்று வினவவில்லை. மேலும் எவ்வாறு அதை செய்தீர் என்றும் கேள்வி எழுப்பவில்லை! தூதர் (ஸ) அன்னாரின் குற்றத்தை அங்கீகரித்தார். தகுந்த தண்டனைக்கு ஆளாக்க வேண்டிய காரணமாகும். ஆனால் தன் தவறுகளை ஓத்துக் கொள்ளுதலே, அன்னார் செய்த தவறின் இரங்கலைத் தெரிவிப்பதாகவும் பாவமன்னிப்புக் கோருவதாகவும் தூதர் (ஸல்) எண்ணப்பட்டுக் கொள்ளவும் செய்தார். தவறுகளை அங்கீகரித்துக் கொள்ளுதலே, தன் தவறுக்கான பாவ மன்னிப்பைத் தேடுவதும் பாவ விடுதிக்கான வழியுமாகும். இவற்றிற்கெல்லாம் மேலாக அவர் இறைத் தூதரோடு பிராத்தனையும் செய்தார்.

அபூதாவூத் (ரலி) அவர்கள், ஒருவர் செய்த தவறை எடுத்துரைத்து ரிப்போர்ட் செய்திருக்கின்றார். அன்னாரின் பெயர் வெளிப்படுத்த வில்லை தூதரின் முன்பாக ஒருவர் வந்து சொன்னார். **“இறைத் தூதரே நான் ஒரு தவறு செய்தேன்”. ஆகையால் தாங்கள் என் மேல் தண்டனை நிறைவேற்ற வேண்டும். தூய தூதர் (ஸல்) வினவினார். வருவதற்கு முன் நீங்கள் குளித்து சுத்தமானீரா? ஆம் என்று அவர் பதிலளித்தார். தூதர் (ஸல்) கேட்டார். நீர் எங்களோடிணைந்து தொழுகை நிறைவேற்றினீரா? அன்னார் கூறினார். ஆம் பூர்த்தி செய்தேன் தூதரே அப்பொழுது தூய தூதர் (ஸல்) கூறினார். செல்லுங்கள் இறைவன் கருணாநிதியாவான். அவன் உங்களுக்கு மன்னிப்பு வழங்கியிருக்கின்றான்.** (அபூதாவூத் அனசாயி, அல்புகாரி. முஸ்லீம்)

எனது இஸ்லாமிக சகோதர சகோதரிகளே இத்தரணியில் நாமனைவரும் தற்காலிகமானவர்கள் ஆவோம். எல்லாம் வல்ல அல்லாஹ்வின் பால் உள்ள வழியை நாமே

திறக்க வேண்டும். களங்க மற்றவராயி அதற்கான வழி திறப்போம். நமது அந்தஸ்தும், மகிமையும் பாதுகாப்பது போன்று பிறரின் அந்தஸ்தும் மகிமையும் பாதுகாக்க வேண்டும். உங்களின் மேல் அல்லாஹ் அணிந்திருக்கும் மறையை எண்ணி நீங்கள் எப்போதும் அஞ்சிக் கொள்ளுங்கள். அவனின் மற்று வேலைகாரர்களான மக்கள் மீதான மறையையும் அஞ்சுங்கள்! நீங்கள் மூட வேஷம் கட்டதீர்கள். உண்மையான இஸ்லாமின் போதனைகளை உள்ளத்தில் குடியிருத்துங்கள். பிறகு அதை செயல் வடிவில் மக்கள் மத்தியில் சமர்ப்பியுங்கள். அறியுங்கள் ஒரு மனிதன் மற்றோரு மனிதனின் மறையாவான். இஸ்லாமில் தன்னுடைய சகோதரனை அல்லது சகோதரியை கடுமையான முறையில் துன்புறுத்துவது எவ்வளவு துரதிர்ஷ்டம்! அவர் மாப்பு இரக்கவில்லையே! இந்த இழிந்த சிந்தனைகள் மனித உள்ளங்களில் பெரும் வியாதியை ஏற்படுத்துகின்றது. அதில் நின்று அல்லாஹ் பாதுகாப்பு வழங்குவானாக! இன்ஷா அல்லாஹ் ஆமீன்!

**Issued by:**

**Jamaat Ul sahih Al Islam Dawa Department**

**Tamil Nadu, India (Regd. No. A/693)**

**Web: www.jamaat-ul-sahih-al-islam.com**

**Translated by: Abdhul Sudeer**

**Proof Reading: Azim Ahmad**

**E-mail: azimahmad070@gmail.com**

**Cell: 9789180817.**